

Foto Vera Hartmann Gockhausen

# குழந்தைகளுக்கு திரையூடகங்கள் தேவையா?

பெற்றோரைப் பயிற்றுவித்தல் CH இன் ஒரு வெளியீடு

Victorinox மற்றும் தேசிய இளைஞரும் ஊடகங்களும் அமைப்பு ஆகியவற்றால் ஆதரவளிக்கப்பட்டது

STARK DURCH BEZIEHUNG

# குழந்தைகளுக்கு திரைகளற்ற வாழிடம் வேண்டும்!

குழந்தைகளுக்கு தமது உணர்வு பூர்வமான பாதுகாப்பு, கவனிப்பு, தொடர்பாடல் என்பன ஒரு பராமரிப்பாளருடனேயே விருத்தியாக வேண்டும். குழந்தைகளும் மழலைகளும் திரையூடகங்களுடன் தொடர்பு பட்டிருப்பது அதிகரிப்பதானது பெற்றோருக்கு ஒரு சவால் என்பதுடன் உணர்வு பூர்வமான அணுகுமுறை ஒன்றைத் தேவைப்படுத்துகிறது.

## குழந்தைகளும் மழலைகளும் திரை யூடகங்களுக்கு எதிர்வினையாற்றுகின்றன

எவ்வாறாயினும், திரையூடகங்கள் ஒரு குடும்பத்தின் அன்றாட வாழ்வின் ஒரு பகுதி என்பதனால், குழந்தைகள் ஏராளமான திரைகளுடன் தொடர்பு படுகின்றனர். தம்மை விட திரைகளே கூடிய கவனிப்புப் பெறுகின்றனவெனக் குழந்தைகள் பெரிதும் உணர்கின்றன. திரையூடகங்களை வீட்டில் பொறுப்பான முறையிற் கையாள்வதற்கான ஆலோசனைகள் சில இதோ:

- நீங்கள் உங்கள் கைப்பேசியினால் தொடர்ச்சியாகத் தொந்தவாகக் கூடாது.
- உங்கள் குழந்தையின் முன்னிலையில் இணையத்தைப் பயன்படுத்த வேண்டாம்.
- நீங்கள் உங்கள் குழந்தையுடன் பயணிப்பதாயின், ஓர் ஊடக இடைவேளையைப் பெறுங்கள்.
- உங்கள் குழந்தையை திரையூடகங்களுடன் தொடர்பாக்கவோ, அவற்றினால் தாலாட்டவோ வேண்டாம்.

## குழந்தைகளின் தேவை

- இடையீடற்ற கவனிப்பும் விழித் தொடர்பும்
- நம்பகமான உறவுகள்
- ஓய்வும் ஆறுதலும்
- சொந்த உணர்வு பூர்வமான அனுபவங்கள்
- கூடியளவு தானாக நகர்வதும், புதிய காற்றும்

## விளையாடுவது என்பது உணர்வுகளினால் கற்பதும் ஒட்டுமொத்த வளர்ச்சியைத் தூண்டுவதும் ஆகும்

வீட்டில், குழந்தைகள் விளையாடி மகிழக்கூடிய எத்தனையோ பொருட்கள் உள்ளன. உதாரணமாக:

- துணி நிரம்பிய ஒரு செல்லப் பிராணிப் பொம்மை
- கரண்டிகள், பழைய பீங்கான்கள் போன்றவற்றுடன் விளையாடுதல்
- பழைய ஆடையொன்றின் கொழுவிகளுடன் விளையாடுதல்
- ஒன்றுக்குள் ஒன்றான அல்லது மேலும் கீழுமான வித்தியாசமான அளவுகள் கொண்ட அட்டைப் பெட்டிகள்
- இவ்வாறானவை

வெளியிலும், குழந்தைகள் கேட்டல், பார்த்தல், முகர்தல், சுவைத்தல், தொடுதல் ஆகிய உணர்வுகளின் மூலம் அறிந்துணரக்கூடிய பல விடயங்கள் உள்ளன. உதாரணமாக:

- வித்தியாசமான அளவுகள் கொண்ட கூழாங் கற்களைக் குவித்தல்
- பழைய மரக்கட்டை, பட்டைத் துண்டுகள், காய்ந்த சருகுகள் போன்றவற்றை முகர்தல்
- புதிதாக விழுந்த பழங்களின் நல்ல, மென்மையான மேற்பரப்பை உணர்தல்
- மணலில் (அல்லது களி மண்ணில்) குழி தோண்டுதல்
- ஒரு மண் புழுவை அறிதலும் தொடுதலும்
- இவ்வாறானவை

இந்த ஏடு சூரிக்கு மாநகர சபையின் பழக்க அடிமையாதல் தடுப்பு அலகின் ஒத்துழைப்புடன், சூரிக்கு கைக்குழந்தைகள் பிரச்சினைத் தடுப்பு நிறுவனத்தினால் பல்வேறு துறைசார் வல்லுநர்களினதும், சுவிட்சர்லாந்து செவிலியர் சங்கத்தினதும் ஒத்துழைப்புப் பெற்று உருவாக்கப்பட்டது.

### குறிப்புக்களை வாசிக்க

**jugendundmedien.ch** எனும் வலைத்தளம் டிஜிட்டல் ஊடகங்களின் தற்கால நோக்குகளையும் இடர்களையும் பற்றித் தகவல் திரட்டி வைத்துள்ளது. பெற்றோர்கள், ஆசிரியர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் ஏனைய வல்லுநர்கள் ஆகியோர் தமது பிரதேசத்திலுள்ள தேசிய இளைஞரும் ஊடகங்களும் அமைப்பிலிருந்து பெருமளவு தகவல்களையும் வாய்ப்புக்களையும் பற்றி அறிந்து கொள்ளலாம்.

Elternbildung CH
Steinwiesstrasse 2
8032 Zürich
தொ.பே. 044 253 60 60
info@elternbildung.ch
www.elternbildung.ch

Stadt Zürich
Suchtpräventionsstelle

JUGEND UND MEDIEN
NATIONALES PROGRAMM ZUR FÖRDERUNG VON MEDIENKOMPETENZEN

Auflage 3/2013 / 100'000 Expl. / 16 Sprachen / **Tamil**